රාජ්‍ය සේවා, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Services, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන / தொலைபேசி: **(94) 011- 2694560** / Telephone
ෆැක්ස් / தொலைநகல்: **(94) 011- 2692254** / Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** / E-mail
වෙබ් අඩවිය / இணையத்தளம்: **www.pubad.gov.lk** / Web Site

මගේ අංකය / எனது இல / My No: PS/GT/2019-01
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2021.06.10

*அமைச்சுக்களின் செயலாளர்கள்*

*மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்*

*திணைக்களத் தலைவர்கள்*

*மாவட்ட செயலாளர்கள்*

**கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையில் பயிலுநர் பட்டதாரிகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்**

*2018/2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு ஏற்கனவே அரசாங்க நிறுவனங்களில் பயிற்சி பெறுகின்ற பயிலுநர்களை சுகாதார வழிகாட்டல்களுக்கும் நடமாட்டக் கட்டுப்பாடு தொடர்பான ஏற்பாடுகளுக்கும் உட்பட்ட வகையில் அத்தியவசியமான பணிக் கடமைகளுக்காக அழைக்க முடியும்.*

*02. அந்த பயிலுநர்களை அத்தியவசிய சேவைகளுக்காக அழைத்தல், விடுமுறை வழங்குதல் மற்றும் சேவையைப் பெறுதல் தொடர்பில் 02/2021 (II) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை ஏற்புடையதாக்கிக் கொள்ளுமாறு பணிவுடன் அறியத் தருகின்றேன். அதற்கிணங்க பயிலுநர் கொடுப்பனவுகளைச் செலுத்தும் போது, ஒரு அத்தியவசிய விடயத்திற்காக சேவைக்கு அழைக்கப்பட்டு, முறையான அனுமதி பெறாமல் பயிற்சிக்குச் சமுகமளிக்காத நாட்கள் இருப்பின், அந்த நாட்களை மாத்திரமே சம்பளமற்ற லீவு நாட்களாகக் கருத வேண்டும்.*

*03. 2018/2019 ஆம் ஆண்டுகளில் ஆட்சேர்ப்புச் செய்யப்படடு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கான நியமனங்களை இதுவரையில் பெற்றிராத, பல்வேறு காரணங்களுக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பட்டதாரிப் பயிலுநர்களுக்குச் செலுத்தப்படும் ரூபா 20,000/- கொடுப்பனவு மே மற்றும் ஜூன் மாதங்களுக்காகச் செலுத்தப்பட வேண்டுயுள்ளதுடன் அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் தொடர்பில் இந்த அமைச்சின் பிரதான நிதி உத்தியோகத்தரிடம் விசாரித்து அறிந்து கொள்ளுங்கள்.*

*ஒப்பம்/. ஜே.ஜே. ரத்னசிரி*
*செயலாளர்*
*அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு*

*1. பிரதான நிதி உத்தியோகத்தர் - நடவடிக்கை எடுப்பதற்காக*